### *Institute of Agricultural Economics*

* 212 *Q.*—Thiru B. VENKATASWAMY : Will the Hon. the Minister for Food and Agriculture be pleased to state—

(*a*) whether there is any institute like "Institute of Agricultural Economics" in our State; and

(*b*) if not whether the Government will come forward to open such institution?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :**

(அ) இல்லை. இருப்பினும் வேளாண்மைப் பொருளாதாரம் இம் மாநிலத்தில் வேளாண்மைக் கல்லூரிகளில் கற்பிக்கப்படும் பாடங்களில் ஒன்றாக இருக்கிறது.

(இ) அத்தகைய செயற்குறிப்பு எதுவும் தற்போது அரசாங்கத்தின் ஆலோசனையில் இல்லை.

Thiru K. S. KOTHANDARAMIAH : If it is not possible to start a separate institution to teach the subject, will the Hon. Minister be pleased to state whether he will include this subject in the existing colleges?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** இப்பொழுது இருக்கும் வேளாண்மைக் கல்லூரியில் பி.எஸ்.ஸி. பைனல் இயரில் இந்தப் பாடம் சொல்லிக் கொடுக்கப்படுகிறது. எம். எஸ்ஸி. பைனல் இயரிலும் இந்தப் பாடம் சொல்லிக்கொடுக்கப்படுகிறது.

### செவிலியர்களுக்கு வழங்கப்படும் உணவு.

* 213 வினா—**திரு. கொளத்தூர் கோதண்டம் :** மாண்புமிகு பொதுச் சுகாதார அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரியில் பணிபுரியும் நர்சுகளுக்குப் போடப்படும் உணவின் தரத்தை உயர்த்த சர்க்கார் மேற்கொள்ளப்போகும் நடவடிக்கைகள் யாவை

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :**

இது அரசாங்கத்தின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. கொளத்தூர் கோதண்டம் :** அங்கு காண்ட்ராக்ட் மூலமாக உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டு உள்ளே உணவாக மாற்றப்படுகிறது. அங்கே உணவாக மாற்றப்படும்போது நீண்ட காலமாகப் பணிபுரிகிறவர்கள் இருக்கிற காரணத்தால் அந்த உணவுப் பொருள்கள் திருடு போகிறது என்ற புகார்கள் சொல்லப்படுகின்றன. ஆகவே, உணவாகவே சப்ளை செய்வதற்கு காண்ட்ராக்ட் பெற உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** காண்ட்ராக்ட் மூலம் உணவுப் பொருள்கள்தான் தரப்படுகிறது. அது அங்கே சமையல் செய்யப்பட்டு வழங்கப்படுகிறது. அது ஒழுங்காக நடைபெறுகிறதா என்பதை மேற்பார்வையிட வார்டன், ஹவுஸ்கீப்பர் ஆகியோர் இருக்கிறார்கள். அவர்கள் மேற்பார்வையில் அது ஒழுங்காக நடைபெற்று வருகிறது.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** இப்போது நர்சுகளின் நிலைமை மிக மோசமாக இருக்கிறது என்பதை இந்த அரசாங்கம் உணருகிறதா ? அண்மையில் சில நர்சுகளுக்கு மஞ்சள் காமாலை நோய் வந்து நான்கு பேர்கள் இறந்து விட்டார்கள். அந்த வகையில் நர்சுகளுக்குச் சரியாக